# யாழ்ப்பாண பத்திரிகைகள் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் 2016

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | யாழ்ப்பாண பத்திரிகைகள் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் 2016 |
| செயற்றிட்ட எண் | NF/PG/2016/0051 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | தை 2016 - மார்கழி 2016 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | யாழ்ப்பாண நூலகம், யாழ்ப்பல்கலைக்கழக நூலகம், நூலக நிறுவனம், பதிப்பகங்கள், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |

**அறிமுகமும் பின்புலமும்**

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாக திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. 2015 இறுதி வரை நூலக நிறுவனம் 16,000 எழுத்தாவணங்களை எண்ணிம வடிவங்களில் சேகரித்து இணையத்துக்குக் கொண்டுவந்துள்ளது. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியன உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு ஆண்டுவாரியாகவும், பதிப்பகங்கள் வாரியாகவும் எழுத்தாளர்கள் வாரியாகவும் பொருட்தலைப்பு வாரியாகவும் இலகுவில் கிடைக்கக்கூடிய வகையில் நூலக வலைத்தளத்தில் பகுப்பாக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பல்வேறு வலைவாசல்கள் ஊடாகவும் சிறப்புச் சேகரங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்டச் சுருக்கம்

எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டமானது ஆண்டு தோறும் நூலக நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டமாகும். எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள் நூலகத்துக்கு அன்பளிப்பாகவும் இரவலாகவும் வழங்கும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலக நிறுவனச் செயற்றிட்டங்கள் ஊடாகக் கிடைக்கப்பெறும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலகச் சேகரிப்பில் விடுபட்ட ஆவணங்களையும் புதிதாக இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களையும் இனங்கண்டு அவற்றை எண்ணிமப்படுத்தல், நூலக நிறுவன செயற்பாடுகளில் முக்கியம் பெறுகிறது. அவ்வகையில் இச்செயற்றிட்டம் மூலம் 2016 இல் 14,347 பத்திரிகைகள் நூலகம் வலைத்தளங்களில் இணைக்கப்பட்டன.

## இலக்குகளும் நோக்கங்களும்

ஈழத்தின் தமிழ் பேசும் சமூகங்களில் வெளிவந்த ஆரம்ப காலப் பத்திரிகைகள் பல ஏற்கனவே ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன் தொடர்ச்சியாக இந்தச் செயற்றிட்டம் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைகளை சேகரித்து அவற்றை எண்ணிமப்படுத்தி அவற்றை பாதுகாத்தலை முக்கிய நோக்கமாகக் கொண்டது.

## செயற்பாட்டு முறைமை

இச்செயற்றிட்டமானது பிரதானமான பின்வரும் படிமுறைகளைக் கொண்டுள்ளது.

1. **ஆவணங்களைச் சேகரித்தல்:** ஆய்வாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், ஆளுமைகளிடமிருந்தும் நூலகங்கள் உள்ளிட்ட சமூக நிறுவனங்களிடமிருந்தும் கள ஆய்வுகள் மூலமும் ஆவங்கள் சேகரிக்கப்படுகின்றன்.
2. **ஆவணங்களை எண்ணிமப்படுத்தத் தயார் செய்தல்:** ஆவணங்கள் முழுமையாக உள்ளனவா, பதிப்புரிமை அனுமதி உள்ளதா, ஏற்கனவே குறித்த ஆவணம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதா போன்றவை சோதிக்கப்பட்டு எண்ணிப் படுத்த அனுப்பபடுகின்றன.
3. **எண்ணிமப்படுத்தல்:** ஆவணங்களுக்குப் பொருத்தமான கருவிகளைப் பயன்படுத்தி நூலக நிறுவனத்தால் சர்வதேச நியமங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட தரத்தில் எண்ணிமப்படுத்தல்
4. **அணுக்கப்படுத்தல்:** எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களைச் சரிபார்த்து உரிய விபரத் தரவுகளுடன் இணையத்தில் கிடைக்கச் செய்தல்
5. நிறைவுசெய்தல்: எண்ணிமப்படுத்த ஆவணங்களைப் பிரதியெடுத்துக் காப்புப்படிகளை உருவாக்குதலும் மூல ஆவணங்களை உரிமையாளர்களிடம் மீள வழங்குதல் அல்லது சேமித்தல்.

## அடைவுகள்

யாழ்ப்பாண பத்திரிகைகள் எனும் போது குறிப்பாக இவ்வாண்டு சூரியகாந்தி, ஈழகேசரி, ஈழநாதம், ஈழநாடு, நமது ஈழநாடு, உதயன், வித்தகம், தீபம், திசைசெய்தி, சந்திரதீபம், ஐக்கியதீபம், முரசொலி, புதுவிதி, சைவபோதனி,புதினம், பாதுகாவலன், செம்பதாகை, பாட்டாளி, காலைக்கதிர், நாவலன், சைவகாவலன் ஆகிய பத்திரிகைகள் ஆவணப்படுத்தப்பட்டன. அவ்வாறாக மொத்தமாக 14,347 பத்திரிகைகள் ஆவணப்படுத்தப்பட்டு வலைத்தளத்தில் இணைக்கப்ப்பட்டன.

ஆவணங்களின் எண்ணிக்கைகள்

| ஆவண வகை | 2015 இறுதி | 2016 அடைவுகள் | 2016 இறுதி |
| --- | --- | --- | --- |
| பத்திரிகைகள் | 2,483 | 14,347 | 16,830 |

**எதிர்கொண்ட சவால்கள்**

- நூலக நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்கள் எண்ணிக்கையைக் கொண்டு குறிப்பிட்ட அளவு ஆவணங்களையே எண்ணிமப்படுத்த முடிந்தது அதனால் மேலதிக ஆவணங்கள் அலுவலகத்தில் தேங்கியுள்ளதோடு தேங்கியுள்ள ஆவணங்களின் எண்ணிக்கை இந்த ஆண்டில் மேலும் அதிகரித்துள்ளது.
- புதிய கருவிகளை, உபகரணங்களை வினைத்திறனோடு கையாள்வதில்.ஏற்பட்ட சிக்கல்கள். குறிப்பாகச் சில கருவிகள் கணினிகளோடு பொருந்தவில்லை.
- எண்ணிமமாக்கும் கருவிகளைத் தொடர்ந்து இற்றைப்படுத்துவதற்குப் போதிய நிதி ஒதுக்கீடு இருக்கவில்லை.

**கற்றல்களும் பரிந்துரைகளும்**

- எண்ணிமப்படுத்துவதற்கான ஊழியர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.
- பொருத்தமான கருவி உபகரணங்களைப் போதிய அளவில் கொள்வனவு செய்யப் பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.
- ஊழியர்களுக்கு மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- ஆவணச் சேகரிப்பிலும் எண்ணிமப்படுத்துவதிலும் எத்தகைய ஆவணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்கான திட்டமிடல்கள் அவசியம்